**டிசம்பர் – 24**

# TNPSC துளிகள்

- ஒடிசாவில் உள்ள சந்திப்பூரில் இருக்கும் ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் இருந்து விரைவாக எதிர்வினையாற்றும் வகையில் நிலப் பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையானது (Quick Reaction Surface to Air Missile - QRSAM) வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
  - QRSAMன் தொழில்நுட்பமானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO - Defence Research and Development Organisation) உருவாக்கப்பட்டு வருகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## மீன்வள மற்றும் மீன் வளர்ப்பு மேம்பாட்டு நிதி தொடர்பான முதலாவது முத்தரப்பு ஒப்பந்தம்

- மீன் வளத் துறை (இந்திய அரசு), நபார்டு வங்கி மற்றும் தமிழக அரசு ஆகியவை இணைந்து மீன்வள மற்றும் மீன்வளர்ப்பு மேம்பாட்டு நிதியைச் (Fisheries and Aquaculture Development Fund - FIDF) செயல்படுத்துவதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த முத்தரப்பு ஒப்பந்தமானது மீன்வளத் துறையின் உள்கட்டமைப்புத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மொத்தம் ரூ. 7522 கோடி நிதியை நிர்ணயித்துள்ளது.
- இந்தத் திட்டங்கள் தமிழ்நாட்டின் தெற்கு கடற்கரையோரப் பகுதிகளில் செயல்படுத்தப் பட உள்ளன.
- மேலும் இந்த நிதியானது ஆழ்கடல் மீன்பிடித்தல், கூண்டில் வைத்து மீன்களை வளர்த்தல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்றுமதியை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்பட இருக்கின்றது.

*முக்கிய பகுதிகள்*

- நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.
- உவர் நீரில் மீன் பிடிப்பு, கடல் மீன் பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன் வளம் ஆகியவற்றிற்கு ஏற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது.
- உலக மீன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் மீன்வளத் துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% பங்களிப்பைக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## குடிமக்களுக்கு அதிகாரமளிப்பதற்கான நாக்பூர் தீர்மானம்

- மகாராஷ்டிராவின் நாக்பூரில் நடத்தப்பட்ட 'பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துதல் - அரசாங்கங்களின் பங்கு' என்ற பிராந்திய மாநாட்டின் போது 'நாக்பூர் தீர்மானம் - குடிமக்களுக்கு அதிகாரமளிப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறை' என்ற ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்த மாநாடானது மகாராஷ்டிரா அரசாங்கத்துடன் இணைந்து நிர்வாகச்

சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறையினால் (Department of Administrative Reforms and Public Grievances - DARPG) ஏற்பாடு செய்யப் பட்டது.

- மத்திய அரசானது வெளிப்படைத் தன்மை, குடிமக்களை மையமிட்ட திட்டங்கள் மற்றும் குடிமக்கள் பங்கேற்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக குறைந்தபட்ச அரசாங்கம், அதிகபட்ச ஆளுகை என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- சிறந்த ஆளுகைக்காக இதற்கு முன்னர் ஷில்லாங் பிரகடனம் மற்றும் ஜம்மு தீர்மானம் ஆகியவை ஏற்றுக் கொள்ளப் பட்டு உள்ளன.

***முக்கிய சிறப்பம்சங்கள்***

- சிறந்த முறையில் சேவைகளை வழங்கல்
- குறைகளைத் தீர்த்தல்
- டிஜிட்டல் தளங்களின் மூலம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
- துடிப்பான கொள்கைகளை வகுத்தல்
- தொழில்நுட்ப நிபுணத்துவப் பரிமாற்றம்
- சிறந்த ஆளுகைக் குறியீடு.

## 2019 ஆம் ஆண்டின் அனைவரும் அணுகக் கூடிய தேர்தல்கள் குறித்த தேசியப் பயிலரங்கம்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது 2019 ஆம் ஆண்டின் அனைவரும் அணுகக் கூடிய தேர்தல்கள் குறித்த ஒரு தேசியப் பயிலரங்கத்தைப் புது தில்லியில் ஏற்பாடு செய்தது.
- இந்தப் பயிலரங்கத்தின் போது இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரான சுனில் அரோரா 'தடைகளைக் கடத்தல் - எனக்கு மை வைக்கப்பட்டது' என்ற ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்த பயிலரங்கத்தின் போது "2019 ஆம் ஆண்டின் அணுகல் அறிக்கை" என்ற ஒரு அறிக்கையும் வெளியிடப் பட்டுள்ளது.
- இது இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், சமீபத்திய முயற்சிகள் மற்றும் அனைத்து மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களின் பரிந்துரைகள் ஆகியவற்றை அடிக்கோடிட்டுக் காட்டிய ஒரு ஆவணமாகும்.



## ஹுனார் ஹாத்

- USTTAD (மேம்பாட்டிற்காக பாரம்பரியக் கலைகள்/கைவினைப் பொருட்கள் மீதான திறன்கள் மற்றும் பயிற்சியினை மேம்படுத்துதல் - Upgrading the Skills & Training in Traditional Arts/Crafts for Development) என்ற திட்டத்தின் கீழ் ஹுனார் ஹாத் ஆனது மத்திய சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- USTTAD திட்டமானது சிறுபான்மையினச் சமூகங்களின் பாரம்பரியக் கலைகள் மற்றும் கைவினைகள் ஆகியவற்றின் வளமான பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹுனார் ஹாத் என்பது சிறுபான்மையினச் சமூகங்களைச் சேர்ந்த கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் மற்றும் பாரம்பரியப் பொருள்கள் ஆகியவற்றின் கண்காட்சியாகும்.
- சிறுபான்மையினச் சமூகங்களைச் சேர்ந்த கைவினைஞர்களை ஊக்குவித்தல் & ஆதரித்தல் மற்றும் உள்நாட்டு & சர்வதேசச் சந்தைகளை அணுகுவதற்கு அவர்களுக்கு உதவுதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தூய்மை இந்தியா திட்டம் - நகர்ப்புற இலக்கை அடைதல்

- 35 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள நகர்ப்புறப் பகுதிகள் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற (Open Defecation Free - ODF) பகுதிகளாக அறிவிக்கப் பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகரப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

***சிறப்பம்சங்கள்***

- 59 லட்சம் வீட்டுக் கழிப்பறைகள் என்ற இலக்கைக் காட்டிலும் 65.81 லட்சம் வீட்டுக் கழிப்பறைகள் அமைக்கப் பட்டதன் மூலம் இந்த இலக்கு அடையப் பட்டுள்ளதாக நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இலக்கை அடைவதற்காக இந்த அமைச்சகமானது ODF+ மற்றும் ODF++ ஆகிய நெறிமுறைகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- நகர்ப்புறங்களுக்கான தூய்மை இந்தியா திட்டமானது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- கிராமப் புறங்களுக்கான தூய்மை இந்தியா திட்டமானது மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தியாவில் உள்ள கிராமப் புறங்கள் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பகுதிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## பொது நாணயம் - ‘சிஎஃப்ஏ பிராங்க்’ என்பதிலிருந்து ‘எக்கோ’

- எட்டு மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் தங்களது பொதுவான நாணயத்தின் பெயரை ‘சிஎஃப்ஏ பிராங்க்’ என்பதிலிருந்து ‘எக்கோ’ என மாற்ற ஒப்புக் கொண்டுள்ளன.
- CFA பிராங்க் நாணயமானது இதுவரை அந்த நாடுகளின் நாணயமாக இருந்தது.
- ஐவரி கோஸ்ட், மாலி, புர்கினா பாசோ, பெனின், நைஜீரியா, செனகல், டோகோ மற்றும் கினியா-பிசாவு ஆகிய 8 மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் தற்போது சிஎஃப்ஏ பிராங்க்’ நாணயத்தை தங்கள் நாணயமாகப் பயன்படுத்துகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகின் பழமையான புதைபடிவ காடு

- அமெரிக்காவின் நியூயார்க் மற்றும் கெய்ரோ நகரில் உள்ள மணற்கல் குவாரிகளில் 386 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய உலகின் பழமையான புதைபடிவக் காடுகளின் எச்சங்களை விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தக் காடானது உலகின் தற்போதைய மிகப் பழமையான காடான கில்போவா காட்டை விட சுமார் 2 அல்லது 3 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாகும்.
- இந்த காடானது குறைந்தபட்சம் கிளாடோக்சைலோப்சிட்ஸ் மற்றும் ஆர்க்கியோப்டெரிஸ் ஆகிய இரண்டு மரங்களையாவது கொண்டிருக்கும் என்று இந்த ஆராய்ச்சி காட்டுகின்றது.
- இந்தக் காட்டில் மூன்றாவது வகை மரமும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது இன்னும் அடையாளம் காணப் படவில்லை.
- இந்த மரங்கள் விதைகளை விட சிதல்களை மட்டுமே பயன்படுத்தி மீண்டும் உற்பத்தி செய்யப் படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## ஷாட் பிரதிஷாத் திட்டம்

- ஷாட் பிரதிஷாத் என்ற ஒரு திட்டமானது பஞ்சாப் மாநில கல்வித் துறையால் தொடங்கப் பட்டுள்ளது.
- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அரசுப் பள்ளிகளின் தேர்வு முடிவுகளை மேலும் மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- அரசுப் பள்ளிகளில் 5, 8, 10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளில் 100 சதவீத தேர்ச்சி சதவிகிதத்தை அடைவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.
- இந்தத் துறையானது "அசம்பவ் நு சம்பவ் பனாயே, ஷாட் பிரதிஷாத் நதிஜா லியாயே' (சாத்தியமற்றதை சாத்தியமாக்குதல் மற்றும் 100 சதவீத தேர்வு முடிவுகளைப் பெறுதல்) என்ற ஒரு முழக்கத்தை உருவாக்கியுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ராஷ்டிரிய சுயம்சித் சம்மன் 2019

- புது தில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் 17 நபர்கள் மற்றும் 10 அமைப்புகளுக்கு 2019 ஆம் ஆண்டின் ராஷ்டிரிய சுயம்சித் சம்மன் என்ற விருதை வழங்கினார்.
- நகர்ப்புற வனத்துறையின் முன்னோடியான சேதுராம் கோபால்ராவ் நெகின்ஹால் என்பவருக்கு வாழ்நாள் சாதனைக்காக ராஷ்டிரிய சுயம்சித் ஜீவன் சம்மன் என்ற விருது வழங்கப் பட்டது.

### *விருது பற்றிய விவரங்கள்*


- இது 2015 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இந்த விருதானது பின்வரும் 10 பிரிவுகளின் கீழ் வழங்கப் படுகின்றது:

| | |
|---|---|
| 1. கலை மற்றும் கலாச்சாரம் | 6. புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் |
| 2. கல்வி | 7. பொதுச் சேவை |
| 3. சுற்றுச்சூழல் | 8. விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி |
| 4. தொழில்முனைவு மற்றும் வாழ்வாதாரம் | 9. விளையாட்டுகள் |
| 5. சுகாதாரம் | 10. பெண்கள் அதிகாரமளிப்பு |

# முக்கிய தினங்கள்

## கிசான் திவாஸ் (இந்தியாவில் விவசாயிகள் தினம்) - டிசம்பர் 23

- தேசிய விவசாயிகள் தினம் அல்லது கிசான் திவாஸ் ஆனது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 23 ஆம் தேதியன்று இந்தியாவில் கொண்டாடப் படுகின்றது.
- இந்தியாவின் ஐந்தாவது பிரதமரான சவுத்ரி சரண் சிங்கின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் இந்தத் தினமானது தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- இவர் கிசான் தலைவர் என்றும் அறியப்பட்டார். மேலும் லால் பகதூர் சாஸ்திரியின் ‘ஜெய் ஜவான் ஜெய் கிசான்’ என்ற முழக்கத்தையும் இவர் பின்பற்றினார்.
- சவுத்ரி சரண் சிங்கின் கடின உழைப்பால் ‘ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா -1952’ என்ற மசோதாவானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.
- ஒரு நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார & சமூக வளர்ச்சி மற்றும் சமூகத்திற்கு விவசாயிகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தத் தினமானது கொண்டாடப் படுகின்றது.




# இதரச் செய்திகள்

## சுகாதாரம் மற்றும் மாசு குறித்த உலகளாவியக் கூட்டணி – அறிக்கை

- சுகாதாரம் மற்றும் மாசு குறித்த உலகளாவிய கூட்டணியானது "2019 ஆம் ஆண்டின் மாசு மற்றும் சுகாதார நல அளவீடுகள்: உலகளாவிய, பிராந்திய மற்றும் நாடுகள் தொடர்பான பகுப்பாய்வு" என்ற பெயரில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, மாசு காரணமாக ஏற்படும் அகால இறப்புகளின் (வயது முதிர்வின் படி அல்லாமல்) அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 2.3 மில்லியன் (23,26,771 இறப்புகள்) இறப்புகளைக் கொண்டு, உலக அளவில் முன்னிலை வகிக்கின்றது.
- இந்தியாவிற்கு அடுத்தபடியாக சீனா (18,65,566 இறப்புகள்), நைஜீரியா (2,79,318 இறப்புகள்) ஆகிய நாடுகள் அதிக அளவிலான இறப்புகளைக் கொண்டுள்ளன.
- இந்த அறிக்கையானது காற்று, நீர் மற்றும் பணியிடத்தில் ஏற்படும் அசுத்தங்களின் உலகளாவிய தாக்கத்தை மதிப்பிடுகின்றது.

*பிற தரவுகள்*

- மாசுபாடு காரணமாக 1 லட்சம் மக்கள் தொகைக்கு ஏற்படும் மொத்த அகால இறப்புகளில், சாட் நாடு 287 இறப்புகளுடன் முதலிடத்திலும் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு (251) இரண்டாவது இடத்திலும் வட கொரியா (202) மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தப் பட்டியலில் இந்தியா 174 புள்ளிகளுடன் 10வது இடத்தில் உள்ளது.
- காற்று மாசுபாட்டால் மட்டுமே அகால இறப்புகளில், சீனா 12, 42,987 இறப்புகளுடன் முதலிடத்திலும் இந்தியா 2வது இடத்திலும் (12,40,529 இறப்புகள்) பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும் (1,28,005) உள்ளன.
- இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள 3 பட்டியல்களில் இந்தியா மட்டுமே அனைத்திலும் சேர்க்கப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★